ISSN: 2320-4842
Vol-18 No. 04 October–December 2024

முனைவர் து.விஜயராணி
உதவிப் பேராசிரியர்
தனலட்சுமி சீனிவாசன் மகளிர், கலை மற்றும் அறிவியல் கல்லூரி
தன்னாட்சி, பெரம்பலூர் 621 212

# இலக்கியத்தில் மருதநில மக்களின் வாழ்வியலும் பண்பாட்டு அறமும்

ஆய்வுச்சுருக்கம்

மருதம் என்பது பண்டைத் தமிழகத்தில் பகுத்து அறியப்பட்ட ஐந்து வகைத் தமிழர் நிலத்திணைகளில் ஒன்றாகும். வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் என அழைக்கப்பட்டது. இதனால் மருத நிலத்தில் வாழ்ந்தோர் உழவுத் தொழில் புரிவோராவர். மருத நிலத்தலைவர்கள் வேந்தன் மகிழ்னன் ஊரன் கிழவன் என்றும் வேளாண்மை செய்யும் பொருட்டு வேளாளர் என்றும் அழைக்கப்பட்டனர். மருத நிலத்தின் கடவுள் இந்திரன். மருத நிலமக்களின் வாழ்வியல் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள பாங்கினையும் அவர்கள் வாழ்வியல் அற நெறிகளையும் ஆராய்வது இதன்நோக்கம் ஆகும்.

## முன்னுரை

சங்ககால வாழ்க்கைமுறை இயற்கையமைப்பை அடிப்படையாகக் கொண்டது. மக்களின் உணவு தொழில், பழக்க வழக்கங்கள், பொழுது போக்குகள் சமய நம்பிக்கை ஆகிய அனைத்தும் அவாகள் வாழும் சூழ்நிலைக்கேற்ப அமைந்திருந்தது அங்குப் பிறப்பால் இனப்பாகுபாடும் தொழிலும் பகுக்கப்படவில்லை. ஆனால் பிறந்த இடத்தால் மக்கள் பாகுபாடும் செய்தொழிலும் நிர்ணயிக்கப்பட்டன. இயற்கை அமைப்பு. வாழ்க்கை அறநெறியுடன் கொண்ட தொடர்புடன் மக்கள் வாழ்ந்தனர். பண்டைய மக்கள் எத்தகைய சூழ்நிலையிலும் அறம் தவறாமல் வாழ்ந்தனர் என்பதனை மருத நில வாழ்வில் அறியமுடிகின்றது.

## மனித நாகரிக வளர்ச்சியில் மருதம்

குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை என்ற நான்கு வகைத் திணைகளுள் மருதநிலத் திணையே மக்களின் நாகரிக பண்பாட்டை வெளிப்படுத்தும் திணையாகிறது. இம் மருதநிலம் ஆற்றுப் பாய்ச்சல் உடையது. மருதநில மக்கள் ஆற்று நீரைப் பல கால்வாய்கள் வழியாகக் கொண்டு சென்று வயல்களுக்குப் பாய்ச்சினர். சோலைகள் அமைத்தனர். குளங்களையும் ஏரிகளையும் அமைத்து நீரைத் தேக்கி வைத்தனர். மருத நிலம் நீர்வளம் சூழ்ந்த பகுதியாக அமைந்தது. நீர்வளத்தால் மருத நில மக்கள் மட்டுமன்றி அந்நிலத்தில் வாழ்ந்த விலங்குகளும் எவ்வித குறைபாடுமின்றி இன்புற்றிருந்தன. மாடுகள் வயிறாரப் புல் மேய்ந்து உழுதொழிலில் ஈடுபட்டன. சிறந்த விளைச்சலால் எவ்விதக் கவலையும் இல்லாது மக்கள் உண்டு மகிழ்ந்து ஆடிப்பாடி இன்புற்றிருந்தனர். அவ்வகையிலேயே ஆடற்கலை ஓவியக்கலை சிறந்த நுட்பமான சிற்பக்கலை கட்டடக்கலை போன்றன உருவாகி வளர்ச்சிப் பெற்றது. ஏனெனில்

> “மானம் குலம்கல்வி வண்மை அறிவுடைமை
> தானம் தவமுயற்சி தாளாண்மை – தேனின்

கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்"1 நல்வழி- 26

பசி வந்திட்டால் பத்தும் பறந்துபோகும் என்பதனை மணிமேகலையும்

"குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூமஉம்
நாண்அணி களையும் மாண் எழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும்பாவி"2(மணிமேகலை பாத்தரம் பெற்றக்காதை 76-80)

என்பது பெரியோர் வாக்கிற்கிணங்க மனிதன் வயிறார உண்டு இன்புற்று இருக்கும் இடங்களில் அவன் மனம் மகிழ்ச்சியுடன் இருப்பான். அவனது உள்ளத்திலிருந்து பெருக்கெடுத்தும் ஓடும் கலை உணர்வும் வெளிப்படும். எனவே மருத நிலமே மனித வாழ்க்கைக்கும் பண்பாட்டு அறவளர்ச்சிக்கும் காரணமாக அமைந்துள்ளதுஎன்பதை உணரமுடிகின்றது.

**உழவுத்தொழில் மருதநிலம்**

பழந்தமிழ் மக்கள் ஆற்றின் நீரை நன்கு பயன்படுத்தி உழுதொழிலைச் செய்தனர். உணவுப்பொருள்களைத் தாங்களாகவே தயாரித்தனர். உழவர்கள் நிலத்தை உழுவதற்கு கலப்பையைப் பயன்படுத்தினர். கலப்பைகள் மரத்தால் செய்யப்பட்டு இரும்புக்கொழு பொருத்தப் பட்டிருந்தன. செல்வவளத்தில் உழவரும் வாணிகரும் மேலான நிலையில் இருந்ததாக மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது.

'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' எனப்புகழப் படலாயினர். நிலத்தின் விளைவுகளில் நெல்லே முக்கிய விளைபொருளாக இருந்தது. ஒரு பெண்யானை அமரும் இடத்தில் ஏழு ஆண்யானைகள் உண்ணப்போதுமான நெல்விளைந்ததாகவும் வீட்டின் முகட்டளவு நெல் வளர்ந்திருந்ததாகவும் விளைவின் பெருக்கம் எடுத்துரைக்கப்படுகிறது. நெற்களங்களைப் பற்றியும் உழவர்கள் உழுங்கால் எழும் மங்கலப்பாடல்கள் மகிழ்ச்சி ஆரவாரங்கள் ஆகியன பற்றியும் அறுவடைப் பற்றியும் மலைபடுகடாம் எடுத்துரைக்கிறது. நெல் தவிர்த்து பிற விளை பொருள்களும் கரும்பு. தினை பனை தென்னை வாழை மஞ்சள் இஞ்சி. பருத்தி ஆகியன குறிப்பிடத்தக்கவை களை எடுத்தல் நீர் பாய்ச்சுதல் உரம் இடுதல் ஆகியவற்றின் இன்றியமையாமையை

"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும் 3 (குறள் 1037 )

என்ற குறளின் மூலம் நிலத்தினை எவ்வாறு உழவேண்டும் என்பதனையும்

"ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு 4 (குறள் 1038)

என்ற குறளின் வழி நிலத்திற்கு எரு இடும் முறையினையும் நீர்பாய்ச்சும் முறையினும் வள்ளுவர் எடுத்தியம்புவதனை அறியமுடிகின்றது.

இச்சிறப்புடைய உழவர்கள் கலைபடு பொருள்களையும் மலையில் விளையும் பொருள்களையும் தங்கள் வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொண்டனர். மனிதனது அறிவானது வளர்ச்சி நிலை அடைந்தது. கல்விச் செல்வங்களிலும் திறம்பட விளங்கிய தமிழர்கள் நெசவுத்தொழில் தச்சுத்தொழில் முதலிய எல்லாத் தொழில்களிலும் சிறந்து விளங்கினர். கற்கள் பதித்து நகைகள் செய்வதும் பொன்னை உருக்கி நகைகள் செய்வதும் ஆகிய வேலைகள் அவர்களிடத்து சிறப்புற்று வளர்ச்சியடைந்தது. இத்தகைய வாணிபத்தில் கொடுப்பதும் குறையாக கொடுக்காமல் பெறுவதனையும் அதிகமாகமல் வாணிபம் செய்தனர் என்பதனை பட்டினப்பாலை எடுத்துரைக்கின்றது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதை உணர்த்தும் வகையில் ஒற்றுமையுடன் திகழ்ந்தது மட்டுமன்றி ஏற்றுமதி இறக்குமதி செய்யும் வாணிகத்திலும் தலைசிறந்து நின்றனர் மருத நில மக்கள். அவ்வேலையில் அவற்றை திறம்பட வழி நடத்தி மக்களுக்கு உதவ வேண்டி அவர்களுக்குள் ஒரு தலைவரை உருவாக்கினர். அதுவே பின்னர் மன்னர்கள் உருவாகக் காரணமாக அமைந்தது. மன்னர்களுக்கும் சிறந்த பண்பாடு வேண்டும். அதுவே நாட்டிற்கு நல்லது என்று நம்பினர். அப்பொழுதுதான் நாட்டில் மும்மாரி மழைபொழிந்து நாடு சிறக்கும் என்று நம்பினர். மன்னர்களும் மக்களுக்காகவே வாழ்ந்தனர். இனி மன்னர்களின் பண்பாட்டு வாழ்வை உணரலாம்.

மருதத்தில் ஆட்சி முறை

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் 5 (குறள் 388)

என்றார் வள்ளுவர். அரசன் ஆண்டாலும் அரசி ஆண்டாலும் இரு பேரும் சேர்ந்து ஆண்டாலும் அவ்வாட்சி அரசாட்சி என்பர். அரசன் நிர்வாகச் செயல் இல்லாமல் குடிமக்களுள் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவ்வாட்சி மக்களாட்சி ஆகும். இம்முடியாட்சியில் அரசன் இல்லாத போதும் அரசின் நிர்வாகச் செயல்களை அரசாட்சி என்று கூறுவது மரபாகிறது. அரசு என்ற சொல் அரசனை அல்லது அரசியை இவ்விடத்திற்கு குறியாமல் தலைவர் ஒருவரை மற்றும் குறிக்கப்படுவதாயிற்று. எனவே தலைமை என்னும் பொருளுடைய இறைமை என்னுஞ் சொல் மன்னனை அல்லது தலைவனையும் குறிப்பன ஆகிவிட்டன. அவ்வகையில் தலைமைப் பண்பை ஏற்கக் கூடிய ஒருவன் பிறரரைத் தம் அடிமைகளாக வைத்திருக்கவே இவ்வாட்சி என்று எண்ணுதல் கூடாது. மக்களின் நலனைக் கருதி ஆள வேண்டும். புறநானூற்றில் புலவனொருவன் மன்னனிடம்'உனது வெண்குடை வெயில் மறைப்பதற்காக உனக்குப் பிடிக்கப்படுவதன்று – மக்களைக் காப்பாற்றுதலின் அறிகுறியாகவன்றோ பிடிக்கப்பட்டிருக்கிறது என்று அவர் கூறுவதில் தலைமைப்பண்பின் மகத்துவத்தை உணரலாம். மேலும் அரசாட்சி செய்வோருக்கு அஞ்சாமையும் ஈகையும் அறிவும் ஊக்கமும் குறையாமலிருக்க வேண்டுமென்று வள்ளுவரும் வலியுறுத்துகின்றார். மேலும் அரசாள்வோர் நேர்முகமாக வரிவிதித்து வசூலிப்பதற்கு மாறாக மக்கள் மீது மறைமுக வரிகள் சுமத்தினாற் பேரிடர் உண்டாகும் என்றார். அரசாள்வோர் நல்ல திட்டங்களிட்டுப் பொருளைப் பெருக்க வேண்டிய

அளவிற்குப் பெருக்கி அதை சேமித்து தேவையான கால கட்டத்தில் உதவ வேண்டும். இதையே வள்ளுவர்

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" 6 குறள் 385

எனக் கூறினார். எனவே மன்னனுக்கு நீதி அரசனின் தலையாய கடமையாக இருந்தது. 'நாட்டினைக் காப்பது அரசு: அரசினைக் காப்பது நீதி' என்ற அடிப்படைக் கொள்கையை

"இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்" 7(குறள் 517)

என்று வள்ளுவர் வாய்மொழியும் வெளிப்படுத்தும். மக்களுடைய அடிப்படை உரிமைகளைக் காப்பதிலும் நீதியை நிலைநிறுத்துவதிலும் மக்களும் மன்னரும் கண்ணும் கருத்துமாய் இருந்தனர் அவ்வாறே இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவது சிலப்பதிகாரம்.

ஒருகுடையின் கீழ் சிறந்த ஆட்சியில் மும்மாரி மழை பொழிந்து பஞ்சம் இல்லாத வாழ்வை மக்கள் அடைவர்.

"அறன்நிலை திரியா அன்பின் அவையத்துத்
திறன்இல் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தேன் ஆகுக" 8 (புறநா. - 71)

என்பான் பூதப்பாண்டியன் விருப்பு வெறுப்பில்லாத சம நோக்கோடு வழக்கை விசாரித்து நீதிவழங்கியதால் அவையம் துலாக்கோலோடு ஒப்பிடப் பெறுகிறது.

அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
ஞெமன்கோ லன்ன செம்மைத் தாகிச்
சிறந்த கொள்கை அறம்கூ றவையமும் 9 (மதுரைக்காஞ்சி 489-492)

என்று மாங்குடி மருதனாரின் மதுரைக்காஞ்சி மன்னனின் கடமையைப் பேசுகின்றது. நாட்டுக்கு பல செல்வத்தைத் தருவதும் மக்களுக்கு நிழலாக விளங்குவதும் சிறப்புமிக்க செங்கோலாட்சியும் குடையின் தன்மையும் வேலின் வெற்றியும் உலகெங்கும் புகழுடன் விளங்கும் தன்மையுடையன. ஆனால் இன்று அரசியல் நிலைப் பண்பாடு சுயநலமாகவே விளங்குகின்றது.

மருதநில இசையும் ஆடலும்

நம் முன்னோர் குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என்னும் ஏழு இசைகளைக் கண்டறிந்தனர். பின்பு அவற்றைப் பலவாறு பிரித்தனர்.'உலக நடப்புகளில் நிதர்சனமாக தென்படுபவைகளைப் பிரதிபலிப்பதே கலை வடிவமாகும்' என்று அரிஸ்டாட்டில் கலையின் தன்மையை விளக்குகின்றார். மேலும் தூய்மையான காற்றோட்டமுள்ள இடத்தில் வசிப்பவன் தன்னையறியாமல் தேக ஆரோக்கியம் பெறுவது போல அழகான கலைகளின் மத்தியில் வளர்கிறவன் உயர்ந்த மனோபாவங்களைப் பெறுகிறான். அதனால் தான் மருதநிலத்தில் தொடங்கிய மனித வாழ்வானது வளர்ச்சிப் பெற்றது. இசையானது அவன் வாழ்வின் தொடக்க நிலையிலிருந்து அவனது இறுதி நிலை வரை

இரண்டறக் கலந்து விளங்குகின்றது. நம் முன்னோர்கள் இசையால் இறைவனை வழிபட்டனர். இசையில் வல்ல கலைஞர்களை ஆதரித்து அவர்களுக்குத் தேவையான பணிவிடைகளையும் செய்தனர் என்பதை சங்க இலக்கியச் சான்றுகள் எடுத்துரைக்கின்றது.

பெருங் கோவில்களிலெல்லாம் ஆடல் மகளிர் பலர் அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்களுக்கு நிலமும் வீடும் வழங்கப்பட்டன. அவர்கள் கவலையற்ற நிலையில் நடனக் கலையை நன்கு வளர்த்தனர். கோயில் விழாக்களிலும் பிற பொது நிகழ்வுகளிலும் தங்கள் திறமையைக் காட்டினர்.

"செய்திரள் நரம்பில் தந்த மழலையின் இயன்ற பாடல்
தைவரு மகர வீணை தண்ணுமை தழுவித் தூங்கக்
கைவழி நயனம் செல்லக் கண்வழி மனமும் செல்ல
ஐயநுண் இடையர் ஆடும் நாடக அரங்கு கண்டார்" 10 (த.நா.பண்பாடு 345)

என்ற வரிகள் ஆடல்மகளிரின் சிறப்பை உணர்த்துவதாக அமைந்துள்ளது.
பக்திநெறியும் விருந்தோம்பலும்

கடவுள் இந்த உலகத்தைக் காத்து எங்கும் நிறைந்த ஒரு சக்கியாக விளங்குகின்றது என்பதில் நம்பிக்கைக் கொண்டிருந்தனர். அச்சக்தியையே இறை என்றும் இறைவன் என்றும் கடவுள் என்றும் அழைத்தனர். அச்சக்திக்கு நாள்தோறும் பூசை செய்தனர். ஆண்டுதொறும் விழா எடுத்தனர். கோயில்களின் அருகில் மடங்கள் வைத்து அறக்கருத்துகள் பரப்பப்பட்டது. மக்கள் இம்மை மறுமை வாழ்வின் மீது நம்பிக்கை உருவாகியது. சமய நெறி நன்னெறியில் மக்கள் வாழ்ந்து வந்தனர். பழி பாவங்களுக்கு அஞ்சி வாழ்ந்தமையால் அன்றைய கால வாழ்க்கை முறை உயர்ந்த நிலையிலேயும் சிறந்த பண்பாட்டை கொண்டவர்களாகவும் இருந்ததை ஆற்றங்கரை மக்களின் வழி உணரலாம்.

இறைப்பக்தி அதிகமாக வாழ்வின் தத்துவத்தையும் உணர்ந்து கொண்டனர். நிலையில்லாத இவ்வுலகில் புகழ் மட்டுமே நிலைத்திருக்கும். அப்புகழை நிலைநாட்ட வேண்டுமெனில் மனிதனானவன் பிற உயிர்களிடத்து அன்பு செலுத்துதல் வேண்டும். அதுமட்டுமன்றி அறம் செய்து வாழ வேண்டும் அப்பொழுது தான் வீடு பேறு அடையமுடியும் என்பதை உணர்ந்தான். பிறருக்கு உதவி செய்தான். சிறந்த பண்பாடு உருவாகியது. ஏனெனில் பிறர் துன்பப்படுதலைக் கண்டு உள்ளம் நெகிழ்ந்து அவர்க்கு உதவிபுரிதல் பண்பாட்டின் தலையாய பணியாகும். அறவுணர்வும் அறச்செயல்களும் பண்பாட்டை வளர்க்கும் அரிய கருவிகளாகும். அவர்களையே இவ்வுலகம் வள்ளல்கள் என்று பெயர் மகுடம் சூட்டி வாழ வைக்கின்றது. தம்மிடத்து உள்ள பொருள்களை தம்மைச் சுற்றி வாடியிருக்கும் சுற்றத்தார்க்கு மனமார வழங்கி இன்புற்று இருப்பர் சங்க கால மக்கள். ஆனால் இன்றோ பண்பாடு மறந்து சுயநலப் பேய் என்ற வலையில் ஆட்பட்டு கொண்டிருக்கின்றனர். என் தலையைக் கொண்டு வருவோர்க்கு பரிசு வழங்குவதாக என் தம்பி கூறியுள்ளான். எனவே என் தலையை வெட்டித் தருகிறேன் பரிசு பெறுக என்று

புலவரிடம் தன் கைவாளைக் கொடுத்த குமண மன்னன் பண்பாட்டின் எல்லை கண்டவன். இன்றைய அதிகாரவாத மக்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்பவர்.

மருதநில மக்கள் உணவுப் பஞ்சம் இல்லாதவர்கள். வந்த விருந்தினர்களுக்கு நெல்லால் ஆன அரிசி உணவும் இறைச்சியும் கொண்டு இன்முகத்துடன் உணவளித்தனர். அன்போடு உபசரித்தனர். நம் முன்னோர் வாழ்வின் உண்மை நிலையை உணர்ந்தவர்.

காணார் கேளார் கால்முடப் பட்டோர்
பேணா மாக்கள் பிணிநடுக்குற்றோர் 11 (மணி ஆபுத்திரன் அறிவித்த காதை 111-112)

முதலியவர்களுக்கு உணவு வழங்குவதே சிறந்த அறச்செயல் என்று அக்கால மக்கள் கருதினர். ஆங்காங்கே உணவுச்சாலைகளையும் நிறுவினர்.

## முடிவுரை

மனித நாகரிக வளர்ச்சியானது முதலில் ஆற்றங்கரை மக்களிடத்தே இருந்து உருவாகியது. ஆற்றங்கரை மக்கள் என்பவர்கள் வயலும் வயல் சார்ந்த பகுதியைக் கொண்டிருக்கும் மருதநில மக்களே. இம்மருதநில மக்களின் வளர்ச்சியிலேயே முதலில் இயற்கையை வணங்கும் இறைவழிபாடுகள் உருவாகின. பின் மனித வாழ்வின் உண்மையை உணர்ந்துக் கொண்டான். அறிவின் பரிணாம வளர்ச்சியினால் இயற்கையை ரசித்தான். மனம் மகிழ்ந்த காலங்களில் கலைகள் அவனிடத்து உருவாகின. நுட்பமான இசை சிற்பம் ஓவியம் போன்ற கலைகள் தலைத்தோங்கியது. இறை நம்பிக்கையும் தலைத்தோங்கியது. அறம் செய்வது தலையாயப் பண்பு அதுவே வீடுபேறு அடைய உதவும் என்பதை உணர்ந்தான். பிறருக்கு உதவி செய்து இன்புற்றான். தம்மை வழிநடத்திச் செல்ல ஒரு தலைவனை உருவாக்கினான். அவனை நம்பி மக்கள் பின்சென்றனர். நீதி பிறழாத மன்னர்களும் மக்களை நல்வழியில் கொண்டு சென்றனர். பருவ நிலை மாறாது மும்மாரி மழை பொழிந்து சங்க கால மக்கள் இன்பமுடன் எல்லா வளங்களையும் பெற்று வாழ்ந்தனர் என்ற செய்தி அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும். இன்றும் இதைக் கடைப்பிடித்தால் நம் நாடு வளம் பெற்றுத் திகழும் என்பதனை இக்கட்டுரையின் வழி அறியலாம்.

## துணைநூற்பட்டியல்

1.நல்வழி ஔவையார் கழக வெளியீடு திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம் லிமிட்டடு
2.மணிமேகலை துரை தண்டபாணி உமா பதிப்பகம் பவளக்காரத் தெரு மண்ணடி சென்னை 600001
3.தமிழ்ப் பண்பாட்டு வரலாறு – மா.ரா.களஞ்சியம்
4.தமிழர் நாகரிகமும் பண்பாடும் முனைவர் அ. தட்சணாமூர்த்தி ஐந்திணைப் பதிப்பகம் அண்ணாநகர் சென்னை 600040
5.பத்துப்பாட்டு (மதுரைக்காஞ்சி )நியூ செங்சுரிபுக் ஹவுஸ் (பி)லிட் அம்பத்தூர் சென்னை 600098
6.திருக்குறள் பரிமேலழகர் உரை சாரதா பதிப்பகம் சென்னை 14

7.**புறநானூறு மாணிக்கவாசகர் உரை உமா பதிப்பகம் பவளக்காரத் தெரு மண்ணடி சென்னை** 600001